ஸ்ரீ:

ஸ்ரீராம ஜயம்
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி கைங்கர்ய சபை, களியப்பேட்டை

## அன்பர்களுக்கு ஒரு விண்ணப்பம்

ஸ்ரீய: பதியான சர்வேஸ்வரன் நம் போன்ற ஜீவர்களை உஜ்ஜீவிக்கும் பொருட்டு பரம கருணையினால் நாட்டின் பல திவ்ய க்ஷேத்ரங்களில் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருந்து நமக்கு அருள் பாலித்துக் கொண்டு வருகிறான். அவ்வண்ணம் தொட்டாசார்புரம் என்று பூர்வர்களாலும், களியப்பேட்டை என்று பிற்காலத்தில் அழைக்கப்பெறும் கிராமத்தில் சுமார் 500 வருடங்கள் தொன்மையான பெருமாள் கோவிலில் மூலவர் ஸ்ரீலக்ஷ்மி நாராயண பெருமாளாகவும், உற்சவர் ஸ்ரீருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீவேணுகோபால ஸ்வாமியாகவும் எழுந்தருளி சேவை சாதிக்கின்றார்கள்.

களியப்பேட்டை என்ற இக்கிராமம் சென்னையிலிருந்து சுமார் 60 கி.மீ தூரத்தில் செங்கல்பட்டுக்கு அடுத்த பாலாற்றின் மேற்குக் கரையில் 8கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஸ்ரீவேணுகோபாலனைத்தவிர இங்குள்ள கோவிலில் கார்வானத்துள்ளான், செண்பகவல்லித் தாயார், ஆண்டாள், ஆழ்வார், ஆச்சாரியர்கள், எம்பெருமானார், மணவாள மாமுனிகள் விக்கிரகங்களும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 1928ம் ஆண்டு நடைபெற்ற கோவில் சம்ப்ரோக்ஷணத்தின் போது காஞ்சிபுரம் திருவெஃகா சொன்ன வண்ணம் செய்த பெருமாள் இத்திருத்தலத்திற்கு எழுந்தருளி அநுக்ரஹித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவ்வமயம் ஸ்ரீமுதலியாண்டான் ஸ்வாமிகள், திருமணி ஸ்வாமிகள் மற்றும் பிள்ளை லோகம் ஜீயர் ஸ்வாமிகள் ஆகியோரும் இத்திருத்தலத்திற்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தனர். இக்கோவில் கட்டப்பட்டு சம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்ட நாள் முதல் இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுக்கு நித்திய திரிகால பூஜைகள், திருமஞ்சனம், ப்ரம்மோத்ஸவம் அனைத்தும் ஆகம முறைப்படி நடத்தப்பட்டு வந்தன. இந்த பாரம்பரிய கைங்கரியங்கள், 1983 ஆம் ஆண்டு வரை ஒரு குறைவின்றி மிகுந்த பக்தி சிரத்தையுடனும், பெரும் பொருள் செலவிலும் நடத்தப்பட்டு வந்தன. இங்கு எழுந்தருளியுள்ள ஸ்வாமி எம்பெருமானாரின் (உடையவரின்) பத்து நாள் கோலாகல உற்சவத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவ்வுத்ஸவம் ஸ்வாமி

எம்பெருமானாரின் அவதார ஸ்தலமாகிய ஸ்ரீபெரும்பூதூரில் எந்த முறைப்படி நடத்தப்படுகிறதோ அதே முறையைப் பின்பற்றி நடத்தப்பட்டு வந்தது என்பது நமக்குப் பெருமை அளிக்கும் விஷயமாகும்.

நாள்கள் செல்லச் செல்ல கோயில் கைங்கர்யங்களை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. கிராமத்தில் இருந்து பெருவாரியான ஸ்ரீவைஷ்ணவ குடும்பங்கள் பொருளாதார நிலைமையை முன்னிட்டுத் தங்கள் வாழ்வாதாரங்களைத் தேடி நாட்டின் பல பகுதிகளுக்கு குடியேற வேண்டிய நிர்பந்தத்தினால் கோயில் பராமரிப்பில் சரிவு தொடங்க ஆரம்பித்தது. அதன் காரணமாகப் பொருள் வரத்து குறைந்ததினாலும், கோயிலை உரிய முறையில் நிர்வகிக்க முடியாமையினாலும் கோயிலின் பல பகுதிகள் இடிந்து விழத்தொடங்கின. அவற்றுள் மடைப் பள்ளி, மதிள் சுவர்கள் இவற்றைக் கூறலாம்.

கோயில் மேலும் பழுதடைவதை தவிர்க்க ஒரு சில நல்லுள்ளம் கொண்ட அபிமானிகள் கோயிலை புனருத்தாரணம் செய்யும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு ஸ்ரீமான் கோயில் கந்தாடை வாதூல தேசிக அண்ணாவிலப்பன் குமார ராமனுஜாசார்யா ஸ்வாமி (ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமியின்) அனுக்ரஹத்துடனும் ஆலோசனையுடனும் செயல்படத் தொடங்கியுள்ளனர்.

இந்த சீரிய எண்ணத்தின் காரணமாக அவ்வன்பர்கள் 8.8.2010 அன்று ஒன்று கூடி "ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி கைங்கர்ய சபை - களியப்பேட்டை" என்ற சபைக்கு புத்துயிர் அளித்து, குழுமியிருந்த அங்கத்தினர்களுள் "கோயில் புனருத்தாரண கமிட்டி" ஒன்றை ஏற்படுத்தினர்.

அதன் பின் கமிட்டி உறுப்பினர்கள் பலமுறை கூடி பல முடிவுகளை மேற்கொண்டனர். கோயிலின் தற்போதைய நிலைமையை ஆய்வு செய்யவும், செப்பனிடும் பணிக்குத் தேவையான உபகரணங்கள், ஆகும் செலவு இவற்றைக் கணக்கிடவும் ஒரு பொறியாளரையும் ஒரு ஸ்தபதியையும் நியமித்தனர். அவ்விருவரும் கோயிலை நேரே ஆய்வு செய்து அர்த்தமண்டபம் மற்றும் முன் மண்டபம் முதலியவற்றை பழுது பார்க்கவும், மடைப்பள்ளி வாகன மண்டபம், சுற்றுச்சுவர்கள் இவற்றைக் கட்டி முடிக்கவும் சுமார் இருபது லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று தங்கள் திட்ட மதிப்பீட்டினை அளித்துள்ளனர்.

| அவற்றின் விவரம் பின்வருமாறு : | | ரூபாய் |
|---|---|---|
| 1. | மடைப்பள்ளி மற்றும் வாகன மண்டபம் கட்டுவதற்கான செலவு (பணி தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது) | - 5,00,000 |
| 2. | அர்த்த மண்டபம் மற்றும் முன் மண்டபத்தைச் செப்பனிடும் பணிக்கான செலவு | - 8,30,000 |
| 3. | கோபுரம் புனருத்தாரணச் செலவு | - 3,20,000 |
| 4. | மதிள் சுவர் கட்டுவதற்கான செலவு | - 3,50,000 |
| | மொத்தம் | **20,00,000** |

தற்போது திரட்டிய நிதியினைக் கொண்டு ஆரம்பகட்டப்பணிகள் தொடங்கப்பட்டு சீராக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நாம் ஏற்றுக் கொண்ட திருப்பணியை முழுமையாக நிறைவு செய்து ஸம்ப்ரோக்ஷணம் செய்ய நிதியளவு மிகுதியாகத் தேவைப்படுவதால் நல்லுள்ளம் படைத்த பெரியோர்கள் பொருள் உதவியையும் ஆதரவையும் நல்கி எம்பெருமானின் எல்லையில்லா கருணையையும் ஆசியையும் பெறவேண்டும் என்று வேண்டிக் கொண்டு இவ்விண்ணப்பத்தை முன்வைக்கிறோம்.

(Those who are willing to participate in the kainkaryam by way of making donations may draw Cheque / Draft in favour of "**SRI VENUGOPALA SWAMY KAINKARYA SABHA - KALIAPPETTAI**" and send to the address given below).

**ஜி. இரவிகிருஷ்ணன்**

செயலாளர்,

ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி கைங்கர்ய சபை, களியப்பேட்டை

புதிய எண் 2, பழைய எண் 9, 9வது மெயின் ரோடு,

விஜய நகர், வேளச்சேரி, சென்னை 600 042.

தொலைபேசி எண் : 044 22591240

கைபேசி : 94449 14426

email id – svsksabhakaliappettai@gmail.com